# இது நம்தேசம்

' Registered in the department of posts of srilanka under No QD/173/news/2014 '

பார்வை 01 | வள்ளுவர் ஆண்டு 2052 | மே 03 - 10, 2021 | பக்கங்கள் - 04

Web - www.ithunamthesam.com
mail - ithunamthesam@gmail.com




## கொரோனா தீவிரமடையும் நிலையில் நயினாதீவில்
# வெசாக் கொண்டாட்டத்தை உடன் நிறுத்தவும்
### பாராளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி வலியுறுத்தல்

தேசிய வெசாக் பண்டிகையை நைனாதீவில் நடாத்துவதனை நிறுத்த வேண்டும். கஜேந்திரகுமார் எம்பி பாராளுமன்றில் கோரிக்கைநாங்கள் கோவிட் பெருந்தொற்றுப் பற்றிப் பேசுகிறோம். சுகாதார அமைச்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்பாரதூரமான விடயங்கள் முடிவிற்கு கொண்டுவரவேண்டும். அரசாங்கம் தங்களால் முடிந்ததனைச் செய்வதாகக் கூறிவருகிறது.யாழ்ப்பாணத்தில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கிறது. இவ்வகையில்நாச்சிமார் கோவில்தலைவரையும்செயலாளரையும்

ப. 2

## திருமலை மாவட்டத்தில்
# 18 பேர் மரணம்
### 1831 பேருக்கு கொரோனா

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 18 பேர் கொரோனாவினால் மரணித்துள்ளனர் எனவும், 1,831 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அதிக மரணங்கள் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்றுள்ளன எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது. திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் இன்று காலை 10மணிக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ப. 2

## நயினாதீவில் நடைபெற இருந்த
# வெசாக் திடீரென இரத்து
### கொரோனாத் தொற்றே காரணமாம்

யாழ் நயினாதீவு ரஜமகா விகாரையில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த 2021ஆம் ஆண்டுக்கான தேசிய வெசாக் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என புத்த சாசன, மத மற்றும் கலாச்சார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனா அலை அதிகரித்துள்ள நிலையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்தில் கொரோனா உச்சம்
### நேற்று 1393பேருக்குத் தொற்று

மேல் மாகாணத்தில் கொரோனாவின் மூன்றாவது அலை ஆழ ஊடுருவியுள்ளது.

அங்கு நேற்று மாத்திரம் 1,393 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 134 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 591 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 368 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புளுட்டு மானோடை விகாரை அமைப்பு சட்டவிரோதமானது
### பாராளுமன்றில் கஜேந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு!

மட்டக்களப்பு மாவட்ட செங்கலடி ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள புளுட்டு மானோடையில் உள்ள மலையில் பௌத்த கோவில் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றது சட்டவிரோதமானது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். நேற்றைய அவரது பாராளுமன்ற உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த மலை இண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பழமையான புராதன இடமாக இருந்தால் அது தொல்பொருள் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் தமிழர்களுடைய பூர்வீக நிலத்தில் பௌத்த கோவில் அமைப்பதற்கு ஒருபோதும் வழங்கக்கூடாது அது பௌத்தத்திற்கு சொந்தமான இடமல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கோப்புப் படம்

## வெசாக் கொண்டாட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்திருக்கிறது. இதுதான் நிலைமையெனின் நயினாதீவில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய வெசாக் பண்டிகை கொண்டாட்டங்கள் அங்கு நடைபெறமுடியாது. நாட்டிலுள்ள பாரதூரமான நிலைமைகளை கவனத்திற்கொண்டு இவற்றை நிறுத்துமாறு கோருகிறேன். நயினாதீவில் வெசாக் பண்டிகை கொண்டாட்டத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டபோது அதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போதுள்ள பாரதூரமான நிலைமையை கவனத்திற்கொண்டு அதனை நிறுத்துமாறு கோருகிறேன். அவ்வாறு செய்யாதவிடத்து தேவையற்ற வகையில் இனமுரண்பாடுகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியும். இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்ளும் என நான் எதிர்பார்க்கிறேன்.

## திருமலை மாவட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியிலேயே 07 மரணங்கள் சம்பவித்துள்ளன என உப்புவெளிபகுதியில் ஆறு மரணங்களும், மூதூரில் இரண்டு மரணங்களும், கந்தளாயில் இரண்டு மரணங்களும், கிண்ணியாவில் ஒரு மரணமும் சம்பவித்துள்ளது. அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் இரண்டு மரணங்கள் திருகோணமலை மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய பிரிவில் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் இன்று காலை பத்து மணி வரைக்கும் 68 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் 18 பேர் திருகோணமலை நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

மேலும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் எட்டு பேரும், குச்சவெளி பிரதேசத்தில் 8 பேரும், கந்தளாய் பகுதியில் 7 பேரும், மூதூரில் 07 பேரும், பதவிசிறிபுர சுகாதார வைத்திய பணிமனைகுட்பட்ட பகுதியில் 7 பேரும்.குறிஞ்சாங்கேணி பகுதியில் 5 பேரும், தம்பலகாமத்தில் 5 பேரும், கோமரங்கடவல பிரதேசத்தில் இருவரும், கிண்ணியாவில் ஒருவரும் இணங்காணப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு கஜேந்திரன் எம்.பி விஜயம்

தெல்லிப்பழையில் உள்ள ஜீ ஜீ பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் கதிர்வீச்சு சிகிச்சை (radiotherapy) பிரிவில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பில் , மக்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொது செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாநகரசபை உறுப்பினர் ரஜீவ் ஆகியோர் கள ஆய்வு விஜயம் செய்தனர். இதன் போது வைத்தியசாலையில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பில் கஜேந்திரன் எம்.பி வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.




# அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

## பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் சமல் ராஜபக்சவுக்கும் இடையில் சில நாட்களுக்கு முன்னர் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சிறிதரன், கலையரசன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





**1.** கல்முனை பிரதேச செயலகத்தை தரமிறக்கும் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இணக்கம் தெரிவித்தார்.

**2.** முல்லை கரைத்துறைப்பற்றில் 08 கிராம சேவையாளர் பிரிவுகளதும் காணி நிர்வாகத்தினை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்பதனை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக இணங்கினார். இது தொடர்பில் குழு அமைத்து ஆராயும் வரை எந்த நடவடிக்கையும் மேலதிகமாக நடைபெறாதனவும் இணங்கினார்.

**3.** மாதுறு ஓயா இடது கரை நீர்ப்பாசன நீரை வாகனேரி குளத்திற்கு கொண்டு செல்லும் வகையில் விளானோடையில் தடுப்பு அணை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இணங்கினார்.

**4.** மகாவலி நீர் கோடைகாலத்தில் மாவில் பகுதியில் மறிக்கப்பட்டு கோடைகால விவசாயத்திற்காக மூதூர் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. இதனால் மாவில் பகுதியிலிருந்து கடற்கரை வரையான 12KM நீளமான பகுதியில் மாகாவலி ஆற்றின் இரு கரைகளிலும் ஏற்று நீஏப்பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் மார்ச் முதல் செப்ரெம்பர் வரை நீர் இன்மையால் நீர்ப்பாசனம் செய்ய முடியாத நிலையில் பயிர்கள் அழிவடைகிறது. அதனால் மாதம் இருமுறை மாவில் பகுதியிலிருந்து நீரை திறந்து ஏற்று நீர்ப்பாசன விவசாயிகளுக்கு வசதி செய்யுமாறு கோரனோம் அதற்கும் இணங்கினார்.

**5.** அபிவிருத்தி உத்தியோகத்தர்களது இடமாற்ற விடயம் பற்றிப் பேசுவதற்கு இம்மாத இறுதியில் நேரம் ஒதுக்குவதாக தெரிவித்தார்.

# தமிழர் தாயக நிலங்களை அபகரிக்கும் கோத்தா அரசின் செயற்பாடுகள்

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி



சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கமால் தன்னிச்சையாக இந்த நிலங்களை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி, மகாவலி அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார். இது முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இவ்விடயத்தை ஆராய அமைக்கப்பட்ட செயற்குழுவின் நடவடிக்கை முற்றுப்பெறாத நிலையில் ஜனாதிபதி தன்னிச்சையாக எந்த முடிவினையும் எடுக்க முடியாது. நீதியற்ற இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு நான் கோருகிறேன் ஜனாதிபதியை தனது முடிவினை மீளாய்வு செய்யுமாறும் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கோருகிறேன் என நேற்று 04-05-2021 செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது உரையின் முழு விபரம் வருமாறு. கோவிட் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள நிலமையினால் மக்கள் எதிர்நோக்குகின்ற பாரிய பொருளாதார பிரச்சனையிலிருந்து தப்பமுடியாதுள்ளது. இது இந்த நாட்டுக்கு மட்டுமான ஒரு பிரச்சனையல்ல இது ஒரு உலகம் தழுவிய பிரச்சனை. அஜித் நிவாட் கப்ரால் அவர்கள் இங்கு உரையாற்றிய போது இப்பிரச்சனையை விபரித்து, இதனை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ள விழைகிறது என்பதனை விளக்கினார்.அந்தப் பின்னணியில் கோவிட் தொற்று காலத்தில் பொருண்மிய பிரச்சனைகள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் இலங்கையில் வாழும் சாதாரணமக்கள் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனராயின் வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் நிலையைப் பற்றி கற்பனை செய்து பாருங்கள் அதனை உங்களது கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். முப்பத்திரண்டு வருட யுத்தகாலத்தில் பொருளாதார தடைகளை எதிர்கொண்டிருந்த தமிழ் மக்கள் அதிலிருந்து மீளமுடியாதுள்ளனர். இந் நிலையில் இந்த கோவிட் தொற்றினால் ஏற்பட்டுள்ள நிலவரத்திற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பின்புலத்தில் தமிழர் பிரதேசத்தில் நடைபெறும் விடயங்களை சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த பெரும்துயரத்தின் மத்தியிலும் இவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாமல் தமிழர்களுக்கு எதிரான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1984ம் ஆண்டு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் அங்கிருந்து இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இராணுவம் நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளுவதற்காக இம்மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் 2012ம் ஆண்டுவரை இடம்பெயர்ந்தவர்களாக வேறு இடங்களில் தங்கியிருந்தனர். அதுவரை அவர்கள் அங்கு மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை மீளக்குடியேற அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அங்கு சில பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். போருக்குப் பின்னர் அங்குள்ள நிலங்களின் சட்டரீதியான தமிழ் உரிமையாளர்கள் மீளக்குடியேற முற்பட்டபோது, அந்நிலங்கள் மகாவலி அபிவிருந்தி அதிகாரசபைக்குட்பட்ட பிரதேசம் என்று கூறப்பட்டது. கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் கிழக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கருநாட்டுக்கேணி, செம்மலை கிழக்கு, செம்மலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் மகாவலி அபிவிருந்தி அதிகாரசபையின் கீழ் வருவதாக 2007ம் ஆண்டு வர்த்தமானி அறவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.தமிழ் மக்கள் மீளக்குடியேறி நெற் செய்கை மேற்கொள்ள முற்பட்டபோது சட்டரீதியான உரித்துடைய, உறுதிப்பத்திரங்களைக் கொண்ட காணிகளிருந்தும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இது மிகப்பெரிய பிரச்சனையை உருவாக்கியிருக்கிறது. இவ்வாறான வர்த்தமானி அறிவித்தல் வெளியாயிருந்தபோதிலும், காணி நிர்வாக அதிகாரம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திடமே வழங்கப்பட்டிருந்தது. அதனால் கரைத்துறைப் பற்று பிரதேச செயலாளர் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை மீளக்குடியேறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு இறுதியில் இந்த எட்டு கிராம சேவகர் பிரிவுகளதும் காணி நிர்வாகத்தினை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்பதற்கு முயன்றது. காணிகளை நிர்வகிக்கு அதிகாரத்தை தாம் பெற்றுகொள்வதாகவும், சம்பந்தப்பட்ட ஆவணங்களை தங்களுக்கு மாற்றுமாறு மகாவலி அபிவிருந்தி அதிகாரசபை பிரதேச செயலாளருக்கு அறிவித்தது. அச்சந்தற்பத்தில் பாராளுமன்றில் வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாம் இவ்விடயத்தை அறிந்துகொண்டோம். கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரும் நாங்களும் அமைச்சர் சாமல் இராஜபக்சவை சந்தித்து அவரது கவனத்திற்கு கொண்டு வர விரும்பினோம். அவர் தன்பங்கிற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனபரிபாலன திணைக்களம், மற்றும் சம்பந்தப்பட்ட இதர திணைக்களங்களையும் தொடர்புகொண்டு ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தார். அதில் இந்த காணிகளை மகாவலி அபிவிருத்திச் சபைக்கு மாற்றுவதனை இடைநிறுத்துவதற்கு அமைச்சர் உடன்பட்டார். சம்பந்தப்பட்ட தரப்புகளை உள்ளடக்கியதாக ஒரு செயற்குழுவை உருவாக்கி அவர்களின் உடன்பாட்டுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் அவர் இணங்கினார்.அமைச்சர் அந்த செயற்குழுவை நியமித்திருந்தபோதிலும் நாட்டிலுள்ள கொவிட் தொற்று நிலவரத்தினால் அச்செயற்குழு ஒரு தடவையாவது கூடவில்லை. இருப்பினும் பிரதேச செயலாளர் பணியகத்திலிருந்து மகாவலி அதிகாரசபைக்கு காணிகள் மாற்றப்படுவது இடைநிறுத்தப்பட்டது. இதற்காக அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இது இவ்வாறிருக்க, கடந்த மாதம் ஏப்பிரல் 3ம் திகதி வவுனியா வடக்கு நெடுங்கேணிக்கு பயணம் செய்த ஜனாதிபதி சிங்களக்குடியேற்றம் நடந்த போகஸ்வெவ என்ற கிராமத்திற்கு சென்று அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்தார். அந்த கிராம சேவையாளர் பிரிவில் இரண்டு தமிழ்க் கிராமங்களும் ஒரு சிங்களக் கிராமமும் உள்ளன. கொக்கச்சன் குளம் என்ற தமிழ் கிராமம் பின்னர் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு போகஸ்வெவ என்று மாற்றப்பட்டது. அந்த போகஸ்வெவ சிங்களக் கிராமத்திற்குச் சென்ற ஜனாதிபதி தமிழ் கிராமங்களிலுள்ள மக்களுக்கு தன்னைச் சந்திக்குமாறு அறிவிக்கவில்லை. தனித்து சிங்களக் கிராமத்தில் உள்ளவர்களை மட்டும் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பிற்கு முல்லைத்தீவிலிருந்து வந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவர் மகாவலி அதிகாரசபை இந்த நிலங்களை பொறுப்பேற்காததால் அங்கு குடியேற்றப்பட்டவர்கள் காணிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக முறைப்பட்டுள்ளார். இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் மீது ஏற்கனவே பிரதேச செயலாளர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். ஜனாதிபதியோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கமால் தன்னிச்சையாக இந்த நிலங்களை பொறுப்பேற்குமாறு மகாவலி அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார். இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இதற்கு பொறுப்பான அமைச்சர் இந்தவிடயத்தை ஜனாதிபதியிடம் கொண்டுசெல்ல வேண்டும். ஜனாதிபதி அவரது சொந்த மூத்த சகோதரரான அமைச்ருக்கு இவ்விடயம் பற்றி அறிவிக்கவில்லை. அமைக்கப்பட்ட செயற்குழுவின் நடவடிக்கை முற்றுப்பெறாத நிலையில் ஜனாதிபதி தன்னிச்சையாக எந்த முடிவினையும் எடுக்க முடியாது. நீதியற்ற இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு நான் கோருகிறேன் ஜனாதிபதியை தனது முடிவினை மீளாய்வு செய்யுமாறும் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கோருகிறேன் இன்னொருவிடயத்தை கூறி எனது உரையை நிறைவுசெய்கிறேன். நாங்கள் கோவிட் பெருந்தொற்றுப் பற்றிப் பேசுகிறோம். சுகாதார அமைச்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்பாரதூரமான விடயங்கள் முடிவிற்கு கொண்டுவரவேண்டும். அரசாங்கம் தங்களால் முடிந்ததனைச் செய்வதாகக் கூறிவருகிறது.யாழ்ப்பாணத்தில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறுகிற போது அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய முயற்சிக்கிறது. நாச்சிமார் கோவில் தலைவரையும் செயலாளரையும் கைது செய்திருக்கிறது. இதுதான் நிலமையெனின் நயினாதீவில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய வெசாக் பண்டிகை கொண்டாட்டங்கள் அங்கு நடைபெறமுடியாது. நாட்டிலுள்ள நிலமைகளை கவனத்திற்கொண்டு இவற்றை நிறுத்துமாறு கோருகிறேன். நயினாதீவில் வெசாக் பண்டிகை கொண்டாட்டத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டபோது அதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போதுள்ள பாரதூரமான நிலமையை கவனத்திற்கொண்டு அதனை நிறுத்துமாறு கோருகிறேன். அவ்வாறு செய்யாதவிடத்து தேவையற்ற வகையில் இனமுரண்பாடுகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது.. இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்ளும் என நான் எதிர்பார்க்கிறேன்.

# வெற்றிலைக்கேணி விளையாட்டுக் கழகத்திற்கு சீருடைகள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி சென் செபஸ்ரியான் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கான சீருடைகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் திரு சுகாஸ் , மகளிர் அணி செயலாளர் திருமதி கி. கிருபா, வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளர்களான திரு முரளிதரன், திரு ஜெகதீஸ்வரன், திருமதி அருள்மதி ஆகியோர் கலந்துகொண்டனர்.





# திருமலையில் கொரோனா இடர்கால உதவி முன்னணியினரால் வழங்கப்பட்டது

திருகோணமலையில் கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது. திருகோணமலை அன்புவழிபுரம் மற்றும் லிங்கநகரிலேயே இவ் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.





லிங்கநகர்



அன்புவழிபுரம்

## சிறிலங்கா அரசபயங்கரவாதத்தால் கொலை செய்யப்பட்ட

# மாமனிதர் தராக்கி நினைவேந்தல்

சிறிலங்கா அரசபயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் தராக்கி சிவராம் அவர்களின் 16ம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

ஊடகவியலாளராகவும், எழுத்தாளராகவும் செயற்பட்ட மாமனிதர் தராக்கி சிவராம் கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து 28.04.2005அன்று வாகனமொன்றில் வந்தவர்களால் கடத்திச் செயல்பட்ட நிலையில் அடுத்தநாள் பாராளுமன்றத்திற்கு அருகில் வைத்து தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொல்லப்பட்டு 16 ஆண்டுகளாகியும் அவரது கொலைக்கு நீதி எதுவுமே கிடைக்கவில்லை.





